www.loyolacollege.edu

# இலயோலா கல்லூரி (தன்னாட்சி)
## சென்னை - 600 034

# செந்தமிழ்ச் சங்கமம்

## இலயோலா செந்தமிழ் திருவிழா - 2019

**போட்டிகள்**

- பேச்சுப் போட்டி,
- கவிதைப் போட்டி,
- கட்டுரைப் போட்டி.

## ரூ.20,000/- மதிப்புள்ள பரிசுகள்

SAINT IGNATIUS OF LOYOLA

நாள் : பிப்ரவரி 19
இடம்: இலாரன்ஸ் சுந்தரம் அரங்கம்(LS Hall)

இலயோலா மாணவர் புலம்
(Dean of students Office)

மற்றும்

இலயோலா விவாதக் குழு
(Tamil Debating Club)

www.loyolacollege.edu

## இலயோலா கல்லூரி

இலயோலா கல்லூரி 1925ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய அருட்தந்தை பிரான்சிஸ் பெட்ரம் அவர்களால் தொடங்கப்பட்டது. இக்கல்லூரி இயேசு சபையினரால் (Jesuit) நடத்தப்படும் ஒரு கல்விக்கூடமாகும்.

இக்கல்லூரியில் பயின்ற மாணவர்கள் நீதிபதிகளாக, ஆசிரியர்களாக, வங்கிப் பணியாளர்களாக, சிறந்த விளையாட்டு வீரர்களாக, காவல் துறையினர்களாக, திரைப்படக் கலைஞர்களாக, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக, இதழியல் கலைஞர்களாக சமுதாய வளர்ச்சிக்கும் உயர்விற்கும் தங்கள் உழைப்பை நல்கி வருகின்றனர். இனிகோ தமிழ்ப்பேரவை, வீரமாமுனிவர் தமிழ்ப்பேரவை தத்துவபோதகர் தமிழ் இலக்கியமன்றம், இலயோலா விவாதக்குழு என்ற அமைப்புகள் வழியே மாணவர்களுக்குத் தமிழ் உணர்வை வளர்த்தல்,மேடைப் பேச்சுக்கு தயார் செய்தல், ஊடகங்களில் பங்கேற்றல், இலக்கியச் சுவையினைப் பதியவைத்தல் ஆகியவற்றில் சிறந்து விளங்குகின்றது.

## செந்தமிழ்ச் சங்கமம்

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த நம் தமிழறிஞர்கள் வழி, சங்கமித்து தமிழ் வளர்க்கவே இந்த 'செந்தமிழ்ச் சங்கமம்'

தமிழமுதின் சுவையை,
கன்னித்தமிழின் தூய்மையை,
வள்ளுவத்தமிழின் வரலாற்றை,
ஆதித்தமிழின் ஆளுமையை
ஆண்டுதோறும் கொண்டாடிடும் நோக்கில் தொடங்கப்பட்டது தான்
**"செந்தமிழ்ச் சங்கமம்".**

## கவிதை

ஒற்றை வார்த்தையில் கவிதை கேட்டால் மறுகணமே கூறிவிடலாம் 'தமிழ்' என்று.

கேட்டதே தமிழ்த்தாய் எனின் இன்னும் சுருக்கமாகக் கூறலாம் 'நீ' என்று.

இப்படி தமிழே ஒரு கவிதையாய் இருக்க தமிழில் கவிதை எழுதி தமிழுக்குப் பெருமை சேர்க்க வாரீர்..!

கம்பனால் தொடுக்கப்பட்ட கவிதைகளில் மூழ்கிப்போன மக்கள் உங்கள் கவிதைகளில் நீந்தத்தயார்.

## கட்டுரை

எழுது கோலை உங்கள் ஆயுதமாய்க் கொண்டு நாட்டின் வரையறையை உம் உரை கொண்டு மாற்ற வாரீர்!! உங்கள் மொழி வளம், சொல் வளம், சிந்தனைக் களம் அனைத்தையும் வார்த்தைகளின் அணி வகுப்பாகப் படையுங்கள். அழகுத் தமிழின் கட்டுரைகளாய்...

www.loyolacollege.edu

## பேச்சு

உலக மக்கள் அனைவருக்கும் பொதுச் சொத்து!
ஒவ்வொரு மனித மூளைக்கும் ஊட்டச் சத்து!!
மனிதவள மேம்பாட்டிற்கு அடியுரம்!
மனித இனத்திற்குக் கிடைத்த பொது வரம்!!

இப்பேச்சால் முன்னேறிய பலரில் ஒருவராக மாற வேண்டுமா?
பயன்படுத்துங்கள் இந்த அரிய வாய்ப்பை.

---

## பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள்

1. தலைப்புகள் போட்டி நாளன்று அரை மணி நேரத்திற்கு முன்னதாக அறிவிக்கப்படும்.
2. பேசுவதற்கான கால அளவு 5 நிமிடம்.
3. பேசத் தொடங்கிய 4 நிமிடங்களில் எச்சரிக்கை மணி ஒலிக்கப்படும்.
4. கால அவகாசத்தைச் சரியாகக் கடைப்பிடித்தல் அவசியம்.
5. பேச்சு, தலைப்பை ஒட்டியே இருத்தல் வேண்டும்.
6. தனி மனிதத் தாக்குதல், முரணான வார்த்தைகள் பயன்படுத்துதல் கூடாது.
7. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## கவிதைப் போட்டிக்கான விதிமுறைகள்

1. தலைப்புகள் போட்டி நாளன்று அரை மணி நேரத்திற்கு முன்னதாக அறிவிக்கப்படும்.
2. கவிதை எழுதுவதற்கான கால அளவு 30 நிமிடம்.
3. கவிதை 20 வரிகளுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்
4. எழுதிய கவிதையை வாசிப்பதற்கான கால அளவு 3 நிமிடம்.
5. கவிதை, தங்கள் சொந்தப் படைப்பாக இருத்தல் அவசியம்.
6. தனி மனிதத் தாக்குதல் முரணான வார்த்தைகள் பயன்படுத்துதல் கூடாது.
7. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## கட்டுரைப் போட்டிக்கான விதிமுறைகள்

1. தலைப்புகள் போட்டி நாளன்று அரை மணி நேரத்திற்கு முன்னதாக அறிவிக்கப்படும்.
2. கட்டுரை எழுதுவதற்கான கால அளவு 1 மணி நேரம்.
3. கட்டுரை 5 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
4. கட்டுரை, தலைப்பை ஒட்டியே இருத்தல் வேண்டும்.
5. தனி மனிதத் தாக்குதல், முரணான வார்த்தைகள் பயன்படுத்துதல் கூடாது.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

www.loyolacollege.edu

## குறிப்பு:

1. ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு கல்லூரியிலிருந்து (சுழற்சி -I & II சேர்த்து) நால்வர் பங்கேற்கலாம்.

2. பங்கேற்க வருவோர் தங்கள் மாணவர் அடையாள அட்டையுடன், கல்லூரி முதல்வர் அல்லது துறைத்தலைவரிடமிருந்து ஒப்புதல் கடிதம் பெற்று வரவேண்டும்.

3. ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு மாணவர்க்கான பதிவுக் கட்டணம் ரூ.50/-.

4. போட்டிகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் தங்களின் பெயர் மற்றும் விவரங்களைக் கூகுள் படிவம் (Google Form) வாயிலாகப் பதிவு செய்தல் அவசியம். (கூகுள் படிவத்திற்கு ஒருங்கிணைப்புக்குழுவை தொடர்பு கொள்ளவும்).

5. பதிவு செய்த மாணவர்கள் போட்டிக்கான பதிவுக் கட்டணமான ரூ.50/- யைப் போட்டி நடைபெறும் நாளன்று காலை 09.00 மணிக்குள் செலுத்துதல் வேண்டும்.

6. போட்டி நடைபெறும் அரங்கத்தினுள் கைபேசி பயன்பாட்டிற்கு அனுமதியில்லை. மேலும், அனுமதியின்றி நிகழ்ச்சிகளைப் படம்பிடிக்கவும் கூடாது.

7. உடைக் கட்டுப்பாடு உள்ளிட்ட கல்லூரியின் பிற விதிமுறைகள் பின்பற்றுதல் வேண்டும்.

Gmail id: senthamizhsangamam2019@gmail.com
Facebook Page: செந்தமிழ் சங்கமம்.
Instagram Page: senthamizhsangamam2019.

கூகுள் படிவம் பெற (Google Form Link) கீழ் காணும் எண்களைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒருங்கிணைப்புக்குழு**
சு.அஷ்வத் ராம்குமார் - +91 80560 18845
தா.பிரவின் குமார் - +91 88700 89921

www.loyolacollege.edu

